tnkalvi.online

No. of Printed Pages : **19**

6757

A

பதிவு எண்
Register Number

PART - III

கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I/PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

1. Tally என்பது _____ -க்கு உதாரணமாக இருக்கிறது.

(அ) உள்கட்டமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

(ஆ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

(இ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

(ஈ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்

Tally is an example of :

(a) In-built accounting software

(b) Tailor-made accounting software

(c) Customised accounting software

(d) Ready-made accounting software

2. குறைந்து செல் மதிப்பு முறையில், தேய்மானத் தொகையானது :

(அ) ஆண்டுதோறும் குறையும்

(ஆ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்

(இ) அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்

(ஈ) மேற்கூறியவற்றில் ஏதும் இல்லை

Under the written down value method of depreciation, the amount of depreciation is :

(a) Decreasing every year

(b) Increasing every year

(c) Uniform in all the years

(d) None of the above

3. பொருந்தாத ஒன்றைக் கண்டறியவும்.

(அ) காப்புரிமை (ஆ) நற்பெயர் (இ) பதிப்புரிமை (ஈ) இயந்திரம்

Find the odd one out :

(a) Patent (b) Goodwill (c) Copyright (d) Machinery

4. வெளியீட்டு சாதனத்திற்கு ஒரு உதாரணம் :

(அ) ஒளியியல் வருடி (ஆ) சுட்டி

(இ) விசைப்பலகை (ஈ) அச்சுப்பொறி

An example of output device :

(a) Scanner (b) Mouse

(c) Keyboard (d) Printer

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

5. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது ?

(அ) புலனாகும் சொத்து (ஆ) ஓர் நடப்பு சொத்து

(இ) புலனாகா சொத்து (ஈ) ஓர் நீர்மை சொத்து

Goodwill is classified as :

(a) A tangible asset (b) A current asset

(c) An intangible asset (d) A liquid asset

6. வங்கிச்சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது :

(அ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி

(ஆ) வங்கி அறிக்கை

(இ) சில்லறை ரொக்க ஏடு

(ஈ) ரொக்க ஏடு

A bank reconciliation statement is prepared with the help of :

(a) Bank statement and bank column of the cash book

(b) Bank statement

(c) Petty cash book

(d) Cash book

7. கணக்கியல் சமன்பாடு என்பது :

(அ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது

(ஆ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது

(இ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது

(ஈ) வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது

Accounting equation signifies :

(a) Capital of a business is equal to Liabilities

(b) Capital of a business is equal to Assets

(c) Assets of a business are equal to the total of Capital and Liabilities

(d) Liabilities of a business are equal to Assets

8. ரொக்க ஏடு ஒரு :

(அ) உரிய குறிப்பேடு

(ஆ) துணை ஏடு

(இ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

(ஈ) முதன்மை ஏடு

Cash book is a :

(a) Journal proper

(b) Subsidiary book

(c) Both a subsidiary and a principal book

(d) Principal book

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

9. எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும் ?

(அ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள் முதல்

(ஆ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள் முதல்

(இ) சொத்தின் இடாப்பு பெற்ற நாள் முதல்

(ஈ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள் முதல்

Depreciation is to be calculated from the date when :

(a) Asset is received at business premises

(b) Asset is put to use

(c) Invoice of assets is received

(d) Purchase order of Asset is made

10. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு :

(அ) உச்ச நீதிமன்றம்

(ஆ) இந்திய மைய வங்கி

(இ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

(ஈ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்

In India, Accounting Standards are issued by :

(a) Supreme Court of India

(b) Reserve Bank of India

(c) The Institute of Chartered Accountants of India

(d) The Institute of Cost Accountants of India

11. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையை மேம்படுத்தியவர் :

(அ) ஆர்.என். கார்ட்டர் (ஆ) ஜே.ஆர். பேட்லிபாய்

(இ) எம்.சி. சுக்லா (ஈ) லூகா பாசியோலி

The person who developed double-entry book-keeping system :

(a) R.N. Carter (b) J.R. Batliboi

(c) M.C. Shukla (d) Luca Pacioli

12. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது :

(அ) இருப்புநிலைக் குறிப்பு (ஆ) குறிப்பேடு

(இ) பேரேடு (ஈ) இருப்பாய்வு

Financial position of a business is ascertained on the basis of :

(a) Balance sheet (b) Journal

(c) Ledger (d) Trial Balance

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

13. இருப்பாய்வை பாதிக்காத பிழைகள் :

(அ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள்

(ஆ) விதிப் பிழைகள்

(இ) பகுதி விடு பிழைகள்

(ஈ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்

Errors not affecting the agreement of trial balance are :

(a) Errors of undercasting

(b) Errors of principle

(c) Errors of partial omission

(d) Errors of overcasting

14. வணிகத்தின் நிகர இலாபம் _____ அதிகரிக்கும்.

(அ) பொறுப்புகளை (ஆ) எடுப்புகளை

(இ) முதலினை (ஈ) பெறுதல்களை

Net profit of the business increases the _____.

(a) Debts (b) Drawings

(c) Capital (d) Receivables

15. இருப்பாய்வில், பற்று பத்தியின் மொத்தமும், வரவு பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு :

(அ) அனாமத்து கணக்கு (ஆ) வியாபார கணக்கு

(இ) இதர கணக்கு (ஈ) வேறுபாட்டு கணக்கு

The difference of totals of both debit and credit side of trial balance is transferred to :

(a) Suspense account (b) Trading account

(c) Miscellaneous account (d) Difference account

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

16. முன்கூட்டியே செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது :

(அ) இருப்பு நிலைக்குறிப்பின் சொத்து பக்கம்

(ஆ) வியாபார கணக்கில் பற்று பக்கம்

(இ) இருப்பு நிலைக்குறிப்பின் பொறுப்பு பக்கம்

(ஈ) இலாப நட்டக் கணக்கில் வரவுப் பக்கம்

A pre-payment of insurance premium will appear in :

(a) The balance sheet, on the assets side

(b) The trading account, on the debit side

(c) The balance sheet, on the liabilities side

(d) The profit and loss account, on the credit side

17. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம் :

(அ) நிதி நிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய

(ஆ) நிதி நிலைமையை அறிய

(இ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

(ஈ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய

Main objective of preparing ledger accounts is to :

(a) Ascertain the profit or loss and the financial position

(b) Ascertain the financial position

(c) Know the balance of each ledger account

(d) Ascertain the profit or loss

18. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது :

(அ) நடப்பு காலத்திற்கு (ஆ) கடந்த காலத்திற்கு

(இ) எந்த காலத்திற்கும் (ஈ) எதிர் காலத்திற்கு

Revenue expenditure is intended to benefit :

(a) Current period (b) Past period

(c) Any period (d) Future period

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

19. மாற்றுச்சீட்டின் உரிமையை வேறொருவருக்கு மாற்றுவதற்காக அதன் முன்புறத்தில் அல்லது பின்புறத்தில் கையொப்பம் இடுவதை _____ என்பர்.

(அ) புதுப்பித்தல் (ஆ) மேலெழுதுதல்

(இ) மறுக்கப்படுதல் (ஈ) தள்ளுபடி செய்தல்

Signing on the face or back of a bill for the purpose of transferring the title is called _____.

(a) Renewal (b) Endorsement

(c) Dishonour (d) Discounting

20. விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது ?

(அ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை

(ஆ) அனைத்து சரக்குகளின் விற்பனை

(இ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

(ஈ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை

Sales book is used to record :

(a) all credit sales of goods

(b) all sales of goods

(c) all sales of assets and goods

(d) all credit sales of assets

பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

Note : Answer **any seven** questions. Question No. **30** is **Compulsory**.

21. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர் ?

Who are the parties interested in accounting information ?

22. நிறுவன தொடர்ச்சி அனுமானம் குறித்து சிறு குறிப்பு வரைக.

Write short notes on Going Concern concept.

23. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

Give the golden rules of double entry accounting system.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

24. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டுக.

(i) வெளித்தூக்கு கூலி (ii) விற்பனை

(iii) முதலீடுகள் (iv) வாராக்கடன்

State whether the balance of the following accounts should be placed in the debit or the credit column of the trial balance.

(i) Carriage outwards (ii) Sales

(iii) Investment (iv) Bad debts

25. உரிய குறிப்பேடு என்றால் என்ன ?

What is Journal Proper ?

26. சில்லறை ரொக்க ஏடு – சிறு குறிப்பு வரைக.

Write a short note on petty cash book.

27. கீழ்க்கண்ட பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவைகளை திருத்தவும்.

(i) விற்பனை ஏட்டில் ₹ 100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ii) கொள்முதல் ஏட்டில் ₹ 400 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

(iii) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹ 600 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

(iv) விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹ 700 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

The following errors were detected before the preparation of trial balance. Rectify them.

(i) Sales book is undercast by ₹ 100

(ii) Purchase book is overcast by ₹ 400

(iii) Purchase returns book is overcast by ₹ 600

(iv) Sales return book is undercast by ₹ 700

28. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக.

சொத்தின் அடக்கவிலை ₹ 10,000

எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 10 வருடங்கள்

எதிர்நோக்கும் இறுதி மதிப்பு ₹ 2,000

Find out the rate of depreciation under Straight Line method from the following details :

Original cost of the asset - ₹ 10,000

Estimated life of the asset - 10 years

Estimated scrap value at the end - ₹ 2,000

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

29. கணினிமயக் கணக்கியல் முறை என்றால் என்ன ?
What is Computerised Accounting System (CAS) ?

30. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக் குறிப்பு தருக.

நாள்	விவரம்	பே ப எ	பற்று ₹	வரவு ₹
(i)	வங்கி க/கு ப		2,000	
	பங்காதாயம் க/கு			2,000
(ii)	எடுப்புகள் க/கு ப		12,000	
	கொள்முதல் க/கு			12,000

Write the narration with reference to the following journal entries.

Date	Particulars	L.F	Debit ₹	Credit ₹
(i)	Bank A/c Dr		2,000	
	To Dividend A/c			2,000
(ii)	Drawings A/c Dr		12,000	
	To Purchases A/c			12,000

பகுதி - III / PART - III

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

Note : Answer **any seven** questions. Question No. **40** is **Compulsory**.

31. கணக்கியலின் முக்கியத்துவத்தை விரிவாக விளக்குக. (ஏதேனும் மூன்று)
Discuss in detail the importance of accounting. (Any three)

32. 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' - விவரிக்கவும்.
'Only monetary transactions are recorded in accounting'. Explain the statement.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

33. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

(i) முதல் (ii) கட்டடம்

(iii) உள் ஏற்றிச் செல் செலவு (iv) ரொக்கம்

(v) கழிவு பெற்றது (vi) வங்கி

Classify the following into personal, real and nominal accounts.

(i) Capital (ii) Building

(iii) Carriage inwards (iv) Cash

(v) Commission received (vi) Bank

34. 2017 ஏப்ரல் 1 அன்று குமரன் என்பவரது ஏடுகளில் பின்வரும் இருப்புகள் இருந்தன.

சொத்துக்கள் :

ரொக்கம் ₹ 1,00,000; சரக்கிருப்பு ₹ 40,000

கடனாளி க/கு ₹ 10,000; அறைகலன் ₹ 10,000

பொறுப்புகள் :

கடனீந்தவர் க/கு ₹ 40,000

குமரன் முதல் க/கு ₹ 1,20,000

மேலே கொடுக்கப்பட்டுள்ள தொடக்கத் தகவல்களை பேரேட்டில் எடுத்து எழுதுக.

The following balances appeared in the books of Kumaran on April 1, 2017.

Assets :

Cash ₹ 1,00,000; Stock ₹ 40,000

Sundry debtors ₹ 10,000; Furniture ₹ 10,000

Liabilities :

Sundry creditors ₹ 40,000

Kumaran's capital ₹ 1,20,000

Show the ledger postings for the above opening balances.

35. எதிர் பதிவை உதாரணத்துடன் விளக்குக.

Explain about contra entry with example.

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

36. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான காரணங்கள் எவையேனும் மூன்றினைத் தருக.

Give any three reasons for preparing bank reconciliation statement.

37. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

What are the causes for depreciation ?

38. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன ? இரண்டு உதாரணங்கள் தரவும்.

What is Deferred Revenue Expenditure ? Give two examples.

39. வியாபாரி ஒருவரின் 31-12-2016 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹ 50,000.

சரிக்கட்டுதல்கள் :

(அ) வாராக்கடன் ₹ 1,000 போக்கெழுதவும்

(ஆ) 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்.

(இ) 2% கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கவும்.

இவ்விவரம் வியாபாரியின் இலாபநட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

The trial balance of a trader on December 31st 2016, shows sundry debtors as ₹ 50,000.

Adjustments :

(a) Write off ₹ 1,000 as bad debts

(b) Provide 5% for bad and doubtful debts

(c) Provide 2% for discount on debtors

Show how these items will appear in the Profit and Loss A/c and Balance sheet of the trader.

40. வரவு இருப்பு மட்டுமே காட்டும் கணக்குகளை பட்டியலிடுக.

List the accounts which have only credit balances.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

6757

பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**
Note : Answer **all** the questions.

41. (அ) ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018 ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

			₹
ஜனவரி	1	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	80,000
	2	வங்கியில் செலுத்திய ரொக்கம்	40,000
	3	ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது	5,000
	4	லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது	10,000
	5	ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	11,000
	6	சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது	5,000
	7	லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி 4 அன்று கொள்முதல் செய்ததற்கான தொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டது	
	8	ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது	4,000
	9	மின் கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது	1,000
	10	நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம்	300

அல்லது

(ஆ) எட்வர்ட் என்பவரின் ஏடுகள் கீழ்க்கண்ட இருப்புகளைக் காட்டுகிறது. 2016 டிசம்பர் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

பற்று இருப்பு	₹	வரவு இருப்பு	₹
எடுப்புகள்	5,000	முதல்	1,31,500
பற்பல கடனாளிகள்	60,000	கடன் (வட்டி 6% ஆண்டுக்கு)	20,000
நிலக்கரி, எரிவாயு மற்றும் நீர்	10,500	விற்பனை	3,56,500
உள் திருப்பம்	2,500	முதலீடுகள் மீது வட்டி	2,550
கொள்முதல்	2,56,500	பற்பல கடனீந்தோர்	40,000
சரக்கிருப்பு (1.1.2016)	89,700		
பயணச் செலவுகள்	51,250		
கடன் மீது வட்டி செலுத்தியது	300		
சில்லறை ரொக்கம்	710		
பழுதுபார்ப்புச் செலவுகள்	4,090		
முதலீடுகள்	70,000		
	5,50,550		**5,50,550**

சரிக்கட்டுதல்கள் :
(அ) 31.12.2016 அன்று இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 1,30,000.
(ஆ) 9 மாதங்களுக்குரிய கடன் மீது வட்டி கொடுபட வேண்டியுள்ளது.

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

(a) Jeyaseeli is a sole proprietor having a provisions store. Following are the transactions during the month of January 2018. Journalise them.

		₹
Jan. 1	Commenced business with cash	80,000
2	Deposited cash with bank	40,000
3	Purchased goods by paying cash	5,000
4	Purchased goods from Lipton & Co. on credit	10,000
5	Sold goods to Joy and received cash	11,000
6	Paid salaries by cash	5,000
7	Paid Lipton & Co. by cheque for the purchase made on 4th January	
8	Bought Furniture by cash	4,000
9	Paid electricity charges by cash	1,000
10	Bank paid insurance premium as per standing instructions	300

OR

(b) Edward's books show the following balances. Prepare his Trading Profit & Loss A/c for the year ended 31st December 2016 and a balance sheet on that date.

Debit Balances	₹	Credit Balances	₹
Drawings	5,000	Capital	1,31,500
Sundry debtors	60,000	Loan @ 6% p.a	20,000
Coal, gas & water	10,500	Sales	3,56,500
Returns inward	2,500	Interest on Investment	2,550
Purchases	2,56,500	Sundry Creditors	40,000
Stock (1.1.2016)	89,700		
Travelling Expenses	51,250		
Interest on Loan paid	300		
Petty cash	710		
Repairs	4,090		
Investment	70,000		
	5,50,550		**5,50,550**

Adjustments :

(a) Closing stock was ₹ 1,30,000 on 31.12.2016.

(b) Interest on loan due for 9 months.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

42. (அ) பின்வரும் நடவடிக்கைகளை கணேசன் என்பவரது ஏடுகளில் குறிப்பேட்டில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளிலும் எடுத்து எழுதுக.

2017		₹
அக். 1	தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது	25,000
5	வங்கியில் ரொக்கம் செலுத்தியது	12,500
10	அறைகலன் வாங்கி காசோலை கொடுத்தது	2,000
15	ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது	5,000
19	வாசு என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது	4,000
22	சொந்தப் பயனுக்காக சரக்குகள் எடுத்துக் கொண்டது	500

அல்லது

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்-படுத்தவும்.

(i) சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது ₹ 75,000

(ii) வங்கியிடமிருந்து பெற்றக் கடன் ₹ 2,50,000

(iii) முதலீடுகள் விற்பனை செய்தது ₹ 1,20,000

(iv) கழிவு பெற்றது ₹ 30,000

(v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ₹ 14,000

(a) Enter the following transactions in the books of Ganesan and post them into ledger.

2017		₹
Oct. 1	Started business with cash	25,000
5	Deposited into bank	12,500
10	Purchased furniture and payment by cheque	2,000
15	Goods purchased for cash	5,000
19	Sold goods to Vasu on credit	4,000
22	Goods worth ₹ 500 taken for personal use.	

OR

(b) Classify the following items into capital and revenue.

(i) Sale proceeds of goods ₹ 75,000

(ii) Loan borrowed from bank ₹ 2,50,000

(iii) Sale of investment ₹ 1,20,000

(iv) Commission received ₹ 30,000

(v) ₹ 14,000 wages paid in connection with the erection of new machinery.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

43. (அ) ராஜேஷ் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்காணும் இருப்புகளைக் கொண்டு 31-3-2017 -ஆம் நாளுக்குரிய இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

	₹		₹
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	13,000	எடுப்புகள்	7,000
வங்கி கட்டணம்	750	பற்பல கடனாளிகள்	17,100
பயணச் செலவுகள்	350	செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு	12,000
பெற்றத் தள்ளுபடி	1,300	முதல்	25,900
கையிருப்பு ரொக்கம்	1,000		

அல்லது

(ஆ) கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிகட்டுப் பதிவுகள் தரவும்.

(i) இறுதி சரக்கிருப்பின் மதிப்பு ₹ 5,000

(ii) கொடுபட வேண்டிய சம்பளம் ₹ 150

(iii) காப்பீடு முன்கூட்டியே செலுத்தியது ₹ 450

(iv) முன்கூட்டிப் பெற்ற கழிவு ₹ 20,000

(v) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ₹ 1,000

(a) Prepare the trial balance from the following balances of Rajesh as on 31st March 2017.

	₹		₹
Bills receivable	13,000	Drawings	7,000
Bank charges	750	Sundry debtors	17,100
Conveyance charges	350	Bills payable	12,000
Discount received	1,300	Capital	25,900
Cash in hand	1,000		

OR

(b) Pass adjusting entries for the following :

(i) The closing stock was valued at ₹ 5,000

(ii) Outstanding salaries ₹ 150

(iii) Insurance prepaid ₹ 450

(iv) ₹ 20,000 was received in advance for commission

(v) Accrued interest on investments is ₹ 1,000

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

44. (அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க.

2017

ஏப்ரல் 1 காஞ்சிபுரம், பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹ 450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹ 180 வீதம் 75 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 10 சென்னை, இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது
ஒரு மீட்டர் ₹ 490 வீதம் 60 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹ 210 வீதம் 50 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 18 நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹ 510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி

ஏப்ரல் 20 மதுரை, ஹரிராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
கட்டு ஒன்று ₹ 730 வீதம் 50 கட்டுகள் காடாத் துணி
கட்டு ஒன்று ₹ 650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி

ஏப்ரல் 24 கரூர், மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
சட்டைத் துணிகள் மதிப்பு ₹ 7,000
சேலைகள் மதிப்பு ₹ 25,000

அல்லது

(ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

(a) Prepare Purchase book and Sales book in the books of Santhosh Textiles Ltd., from the following transactions given for April 2017.

2017

April 1 Purchased goods from Prasad, Kancheepuram on credit
100 meters silk @ ₹ 450 per meter
75 meters velvet @ ₹ 180 per meter

April 10 Sold goods to Rathinam, Chennai on credit
60 meters silk @ ₹ 490 per meter
50 meters velvet @ ₹ 210 per meter

April 18 Nathan & Sons purchased from us on credit
100 meters silk @ ₹ 510 per meter

April 20 Purchased goods from Hari Ram & Sons, Madurai on credit
50 rolls kada cloth @ ₹ 730 per roll
80 rolls calico cloth @ ₹ 650 per roll

April 24 Purchased from Mohan, Karur for cash
Shirting cloth @ ₹ 7,000
Sarees @ ₹ 25,000

OR

(b) Bring out the differences between cash discount and trade discount.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

45. (அ) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31 -ஆம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்து வங்கி அறிக்கையின்படியான இருப்பினைக் கண்டறியவும்.

(i) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது ₹ 500

(ii) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப் படுத்தப்படாதது ₹ 1000

(iii) வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி ₹ 100

(iv) நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய வாடகை ₹ 200

(v) ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹ 300

அல்லது

(ஆ) இலக்குமி போக்குவரத்து நிறுவனம், அக்டோபர் 1, 2014 அன்று ₹ 8,00,000 -க்கு கனரக வாகனம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டு-தோறும் 15% தேய்மானம் நீக்க வேண்டும். 31 மார்ச் 2017 -ல் அக்கனரக வாகனம் ₹ 5,00,000 -க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31 -ல் முடிக்கப் பெறுகின்றன. விற்ற வாகனத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தினை கணக்கிடவும்.

(a) From the following information, prepare Bank reconciliation statement to find out balance as per bank statement on 31st March 2017.

(i) Cheques deposited but not yet collected by the bank ₹ 500

(ii) Cheque issued but not yet presented for payment ₹ 1000

(iii) Bank interest charged ₹ 100

(iv) Rent paid by Bank as per standing instruction ₹ 200

(v) Cash book balance ₹ 300

OR

(b) On 1st October 2014, a truck was purchased for ₹ 8,00,000 by Laxmi Transports Ltd. Depreciation was provided @ 15% p.a under diminishing balance method. On 31st March 2017, the above truck was sold for ₹ 5,00,000. Accounts are closed on 31st March every year. Find out the profit or loss made on the sale of the truck.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

46. (அ) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்டன. அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதி பிழை திருத்தக் குறிப்பேட்டுப் பதிவுகளை தருக.

(i) கொள்முதல் ஏட்டின் மொத்தம் ₹ 100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ii) ரொக்க ஏட்டின் பற்றுப்பக்கம் உள்ள தள்ளுபடிப் பத்தியின் கூட்டுத்தொகை ₹ 575 பேரேட்டில் எடுத்து எழுதப்படவில்லை.

(iii) விற்பனை ஏட்டின் ஒரு பக்கத்தின் கூட்டுத்தொகை ₹ 5,975 அடுத்த பக்கத்தில் முன் எடுத்து எழுதும் போது ₹ 5,795 என எழுதப்பட்டுள்ளது.

(iv) சம்பளம் ₹ 1,800 பேரேட்டில் ₹ 18,000 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

(v) முகிலனிடமிருந்து கடனுக்கு ₹ 150 -க்கு சரக்கு வாங்கியது முகிலன் கணக்கில் ₹ 1,500 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

அல்லது

(ஆ) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்களை விளக்குக.

(a) The following errors were located after the preparation of the trial balance. Assume that there exists a suspense account. Pass journal entries to rectify them.

(i) The total of purchase book was undercast by ₹ 100.

(ii) The total of the discount column on the debit side of cash book ₹ 575 was not posted.

(iii) The total of one page of the sales book for ₹ 5,975 was carried forward to the next page as ₹ 5,795.

(iv) Salaries ₹ 1,800 was posted as ₹ 18,000.

(v) Purchase of goods on credit from Mukilan for ₹ 150 has been posted to his account as ₹ 1,500.

OR

(b) Explain the various types of accounting software.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

47. (அ) இராமலிங்கம் என்பவரின் 2017 ஜூலை மாதத்திற்கான பின்வரும் நடவடிக்கை-களிலிருந்து தனிப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

			₹
2017 ஜூலை	1	கை ரொக்கம்	32,000
	5	கீர்த்தனாவிடமிருந்து ரொக்கம் பெற்றது	5,000
	6	கட்டுமச் செலவுக்காக பணம் கொடுத்தது	300
	7	ரொக்கக் கொள்முதல்	12,400
	8	ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	2,600
	10	மேலாளருக்கு சம்பளம் ரொக்கமாகத் தரப்பட்டது	7,000
	11	பாலா என்பவருக்கு ரொக்கம் கொடுத்தது	3,000
	12	போஸ் என்பவரிடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது	2,500
	24	பணம் வைப்பு இயந்திரத்தின் மூலம் வங்கிக்கு செலுத்திய ரொக்கம்	4,000
	27	வங்கியிலிருந்து பணம் எடுத்தது	2,000
	31	அலுவலக வாடகை ரொக்கமாகச் செலுத்தியது	6,000

அல்லது

(ஆ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

(a) Enter the following transactions in a single column cash book of Ramalingam for month of July, 2017.

			₹
2017 July	1	Cash in hand	32,000
	5	Cash received from Keerthana	5,000
	6	Paid packing charges in cash	300
	7	Cash purchases	12,400
	8	Sold goods for cash	2,600
	10	Paid salary to manager in cash	7,000
	11	Paid to Bala by cash	3,000
	12	Purchased goods from Bose on credit	2,500
	24	Cash deposited into Bank through CDM	4,000
	27	Withdrew cash from Bank	2,000
	31	Paid office rent in cash	6,000

OR

(b) Distinguish between Journal and Ledger.

- o 0 o -

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-accountancy-public-march-2023-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online